# திருவருகைக்காலம் முதல் வாரம் - ஞாயிறு

## மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

திருவருகைக்காலத்தின் முதலாம் ஞாயிறான இன்று, புதிய திருவழிபாட்டு ஆண்டைத் தொடங்குகிறோம். நல்வாழ்த்துக்கள் கூறி புத்தாண்டு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு வந்துள்ள உங்களை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

திருவருகைக்காலம் - எதிர்பார்ப்பின் காலம், நம்பிக்கையின் காலம், கிறிஸ்து பிறப்பு விழாவிற்காக நம்மைத் தயாரிக்கும் காலம். காண முடியாத கடவுள் மனித வரலாற்றில் நுழைந்தார். ஒரு மனிதராக நம் நடுவே வாழ்ந்தார். இந்த மாபெரும் மறையுண்மையைக் கொண்டாடும் நாம், இயேசுவின் இரண்டாம் வருகைக்கும் நம்மைத் தயாரிக்க அழைப்பு விடுக்கும் காலம்தான் இத்திருவருகைக்காலம்.

கிறிஸ்து எங்கே இருக்கிறார்? எப்போது வருவார்? என்றெண்ணிக் காலம் தாழ்த்தாம, கிறிஸ்து நமக்குள்ளே இருக்கிறார், நம் சகோதர, சகோதரிகளிட த்தில் இருக்கிறார் என்று உணர்ந்து வாழ அழைப்பு விடுக்கப்படுகிறது. நீதியையும், நேர்மையையும் நிலைநாட்டும் ஆண்டவர் நம்மிடையே மீட்பராக பிறக்க உள்ளார். விடுதலை உறுதி என நம்பிக்கை தருகின்ற வார்த்தைகளோடு திருவருகைக் காலத்தைத் தொடங்குவோம்.

இதில் புனித பவுலடியாரின் வார்த்தைகள் நம்மை இன்னும் இயேசுவின் வருகைக்குத் தயாரிக்கிறது. ஒருவர் மற்றவர் மீது கொண்டுள்ள அன்பைப் பெருகச் செய்வோம். நம்மிடையே பிறக்கப் போகும் மீட்பரை தகுதியான மனநிலையோடு நம் உள்ளத்திலும் இல்லத்திலும் வரவேற்க எந்நேரமும் நாம் தயாராய் இருக்கும் அருள் வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

## முதல் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! அன்று இஸ்ரயேல் மக்கள் மெசியாவின் வருகைக்காக வழிமேல் விழிவைத்துக் காத்துக் கிடந்தனார். மெசியா நீதியையும், நேர்மையையும் நிலைநாட்டுவார் என்று ஏங்கினர். அவர்களின் நம்பிக்கை பொய்க்காது என்று கூறி விடுதலை வாழ்வை வாக்களிக்கிறார் கடவுள் என்று கூறும் இறைவாக்கினர் எரேமியா நூலின் வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! தொடக்கக் கால கிறித்தவர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்தனர். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எப்போது நிகழும்? என்பது தெரியாது. ஆனால் கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழ்வதன் வழியாக நாம் கிறிஸ்துவை எதிர்கொள்ள முடியும் என அறிவுறுத்தும் புனித பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகத்தின் வார்த்தைகளுக்குச் செவிமடுப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. வாழ்வளிப்பவரே எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவற நிலையினர் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் ஆசீர்வதியும். எப்போதும்

விழிப்புடனும், மக்களை நல்லாயன் வழியில் நடத்திட உமதருள் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. கருணையின் வடிவே எம் இறைவா! எம் இந்திய திருநாட்டிற்காகச் செபிக்கின்றோம். எம் நாட்டில் அன்பு, இரக்கம், பண்பாடு, மனித நேயம் எங்கும் தழைத்தோங்க அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அரவணைத்தாளும் அன்பு இறைவா! இத்திருவருகைக்காலத்தில் உம் வருகையை நோக்கி ஆவலுடன் காத்திருக்கும் உம் மக்கள் அனைவரையும் ஆசீர்வதியும். நாங்கள் எங்கள் சகோதர, சகோதரிகளின் மத்தியில் உமது பிரசன்னத்தைக் கண்டுகொள்ள அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பே உருவான எம் இறைவா! எம் பங்கில் வாழும் முதியவர்கள், நோயுற்றிருப்போர் அனைவருக்காகவும் வேண்டுகிறோம். அவர்களை அனைவரையும் நாங்கள் கண்டுகொள்ளவும், எங்களிடம் உள்ள வளங்களைப் பகிர்ந்து வாழும் மனம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com